1979 நவம்பர் 2]

அப்படி தண்ணீர் கொடுப்பதற்கு ஆறு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அப்படி அதில் ஏதாவது தவறு நடந்திருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தால் நிச்சயமாகப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கனவே பதில் சொல்லும்போது பார்க்கக்கூடாத பத்திரிகைகளைப் பார்த்து விட்டார்கள் என்று பதில் சொன்னார்கள். அந்தப் பத்திரிகைகள் எவை என்று அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும்.

சிறுமுகைப் பகுதி நிலத்தடி நீர்.

* **வினா எண். 70—திரு. சு. பழனிசாமி :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் நீர்த்தேக்கத்தின் காரணமாக சிறுமுகை பஞ்சாயத்திலுள்ள பகுதிகளில் குடிநீர் கெட்டு சுகாதாரத்திற்கு ஊறு விளைவிக்கும் நிலையினை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) அவ்வாறான நிலை எதுவும் இல்லை.

(ஆ) இருந்தபோதிலும் தக்க சோதனைகள் நடத்தி அரசுக்கு கருத்து தெரிவிக்கும்படி மாவட்ட சுகாதார அதிகாரிக்கு ஆணையிடப்பட்டிருக்கிறது.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : சிறுமுகையில் இருக்கக்கூடிய ரயான் தொழிற்சாலை கழிவு நீர் காரணமாக அந்தப் பகுதியில் குடிதண்ணீர் கெடுவதற்கு வாய்ப்பு இருப்பது அரசுக்குத் தெரியுமா ? சிறுமுகையில் குடி தண்ணீர்க் கஷ்டம் ஏராளமாக இருக்கிறது. அங்கு தண்ணீர் விஸ்தரிப்புக்காக பைப்கள் எல்லாம் போடப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் பூர்த்தி செய்யப் படாமல் இருக்கிறது. காலம் கடத்திக் கொண்டு போவதற்கான காரணம் என்ன ? எப்போது பூர்த்தி செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : முதல் கேள்விக்கு அப்படித் தகவல் இல்லை. இரண்டாவது கேள்விக்கு—27 லட்சம் ரூபாய் செலவில் சிறுமுகைக்குக் குடிதண்ணீர் கொடுக்கும் திட்டம் இருக்கிறது. இத்திட்ட வேலைகளில் சிறுமுகைக்கு நீர் கொண்டுசெல்லும் குழாய் பவானி ஆற்றின் குறுக்கே பதிக்க வேண்டிய பகுதி நீங்கலாக அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன. பவானி ஆற்றுப் பாலம் கட்டுமானப் பணி பெருவழித் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. அது முடிவுற்றதும் சிறுமுகைக்கு நீர் கொண்டுசெல்லும் குழாய் பதிக்கும் பணி விரைந்து முடிக்கப்படும்.

கொல்லம்-தூத்துக்குடி விரைவுப் பேருந்துகள்

* **வினா எண். 71—திரு. பொ. சிகாமணி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கேரள மாநிலத்திலுள்ள கொல்லத்திற்கும் தமிழ்நாட்டிலுள்ள தூத்துக்குடிக்கும் இடையே ஓடிக்கொண்டிருக்கும் விரைவுப் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆம்.

திரு. பொ. சிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் உடனடியாக பஸ்கள் விடப்படும் என்று சொன்னதை நன்றியோடு வரவேற்கிறேன். எத்தனை எண்ணிக்கையில் பஸ்கள் விடப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, வினாவில் முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறதா என்று கேட்கப்பட்டுள்ளது. முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 16 வழித் தடங்களில் பேருந்துகள் விடப்படவேண்டுமென்ற அடிப்படையில் கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கிறது. அனுமதி பெறப்பட்டு இருக்கிறது. துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, கேரள மாநிலத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே ஓடுகின்ற இண்டர்-ஸ்டேட் பஸ்களின் எண்ணிக்கை கேரள மாநிலத்திலே ஓடுகின்ற தமிழ்நாட்டு பஸ்களைவிட அதிகமாக தமிழ்நாட்டிலே ஓடுகின்ற கேரள மாநில பஸ்களில் எண்ணிக்கை இருக்கிறது; குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தின் எல்லை ஓரப் பகுதிகளிலே தமிழ்